கூடுதல் மாவட்ட நீதிமன்றம், திண்டுக்கல்.

அசல் வழக்கு எண்.107/2015

பி.வா.சா. – 3– சிவபாண்டி

நாள்.07.01.2023

<u>1 முதல் 3 மற்றும் 8 முதல் 10 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை</u>

நான் 8ம் வகுப்பு வரை படித்துள்ளேன். ஆண்டிமுத்துநாயக்கர் 2010 வருடம் இறந்தார். அவரது வாரிசுதாரர்கள் தான் 1 முதல் 3 பிரதிவாதிகள். என் தகப்பனார் பெரியமாதநாயக்கர் 2013 வருடம் இறந்தார்.தாவா சொத்துகளின் சர்வே நம்பர்கள் எனக்கு தெரியும். தாவா சொத்துக்களுக்கான பட்டா ஆண்டிமுத்துநாயக்கர் பெரியமாதநாயக்கர் மற்றும் சின்னமாதநாயக்கர் பெயரில் உள்ளது. மேற்படி கூட்டுப்பட்டாவை தவிர எனது பெரியம்மா (1ம் பிரதிவாதி) மற்றும் , என் தந்தையார் பெயரிலும் சில பட்டாக்கள் உள்ளது. சில பட்டாக்கள் ஆண்டிமுத்துநாயக்கர் பெயரில் உள்ளது. எனது தகப்பனார் மற்றும் எனது பெரியம்மா (1ம் பிரதிவாதி) யும் சேர்த்து சொத்துக்களை வாங்கினார். 2ம் பிரதிவாதி எனது அப்பாவிடம் இருந்து கிரையம் பெற்றார் என்று சொன்னால் கிரையமாக எனது தந்தையார் கொடுக்கவில்லை. 2ம் பிரதிவாதி கேட்டுகிணங்க ஆவணமாக எழுதி கொடுத்தார். அந்த ஆவணம் எழுதி கொடுத்த 1 வருடம் கழித்து எனக்கு தெரியும். அந்த கிரையம் 23.11.2012ல் ஏற்பட்டது. அந்த பத்திரம் பதியும்போது எனது தகப்பனார் வீட்டில் இருக்கும்போது பத்திர அலுவலகத்திலிருந்து அதிகாரிகளை வரவழைத்து வீட்டில் வைத்து பத்திரம் பதிவு செய்யப்பட்டது. பத்திர பதிவாளர் வீட்டிற்கு வந்து பதிவு செய்தபோது நான் வீட்டில் இல்லை. பத்திர பதிவாளர் வீட்டிற்கு வந்து சென்ற விபரம் பற்றி அங்கு இருந்தவர்கள் பேசிக்கொண்டார்கள். கிரைய பத்திரமானது எனது தந்தையாரின் முழு சம்மந்ததுடன் எழுதி பதிவு கொடுக்கப்பட்டது என்று சொன்னால் சரியல்ல. 2012, 2013 வருடத்திலே மேற்படி கிரையம் பற்றி எனக்கு தெரிந்த பிறகே அந்த சொத்தில் நான் பாகப்பிரிவினை கேட்டு நடவடிக்கை எடுத்தேனா என்று கேட்டால் நடவடிக்கை எதுவும் எடுக்கவில்லை. 2ம் பிரதிவாதி நத்தம் நீதிமன்றத்தில் தாக்கல் செய்த அசல் வழக்கு எண். 113/2015 வழக்கில் நான் ஒரு தரப்பினர். எனக்கும் சின்னமாதநாயக்கர்க்கும் பிரச்சனை எதுவும் இல்லை. எனது பெரியப்பா 2010 வருடம் இறந்தார்,. எனது பெரியப்பா இறந்தபிறகு சொத்தில் பாகப்பிரிவு வேண்டி நான் வழக்கு எதுவும் தாக்கல் செய்யவில்லை. ஆனால் ஊரில் பஞ்சாயத்து பேசப்பட்டது. எனது தகப்பனாரும், எனது பெரியம்மாவும் சேர்ந்து சொத்தை கிரையம் வாங்கும்போது எனக்கு 2 வயது இருக்கும் என்று சொன்னால் 17, 18 வயது இருக்கும். தனிப்பட்டவாக உள்ளதை என் பெயரிலும் வாதிகளின் பெயரிலும் கூட்டாக பதிவு செய்ய நடவடிக்கை

ஏதும் எடுக்கவில்லை. எனது பெரியப்பா மரங்களை குத்தகைக்கு விட்டு அதில் கிடைத்த பணத்தை வைத்து எனது தந்தையார் மற்றும் பெரியம்மா பெயரில் சொத்துக்கள் வாங்கப்பட்டது. எனது பெரியப்பா பொது குடும்ப சொத்துக்கள் எதையும் குத்தகைக்கு விடவில்லை என்றும் தனிப்பட்ட சொத்துக்களில் கிடைத்த வருமானத்தை வைத்து அவர் அனுபவம் செய்து வந்தார் என்று சொன்னால் சரியல்ல. சின்னமாதநாயக்கர் தூண்டுதலின் காரணமாக நான் இந்த வழக்கில் பொய்யாக சாட்சியமளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல.

வாதிகள் தரப்பு குறுக்குவிசாரணை:– இல்லை

/ஒப்பம்/

XXXXXXX

Taken down by me in open court read over to the witness, admitted by him to be correct this contains a full and true account of the statement Made by the witness.

P SARAVANAN

Digitally signed by P SARAVANAN
Date: 2023.01.07 14:21:51 +0530

Additional District Judge,

Dindigul.